கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

தை மாத இதழ்
NEWS BULLETIN
JANUARY 2022
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
08/01/22 முதல்	புதிய கட்டடத் தொகுதியில் எமது தமிழ்ப் பாடசாலை மற்றும் கலைப் பாடங்கள் ஆரம்பம். பாடசாலையின் முகவரி: Clifford House, 38-44, Binley Road, Coventry CV3 1JA.


SATURDAY	TIME
Tamil	9.50am-12.30pm
Vocal	1pm-4pm
Keyboard/Violin	1pm-4pm
Karate	12.30pm-1.30pm

SUNDAY	TIME
Bharathanatiyam (Sathya Teacher)	10am-2pm
Bharathanatiyam (Ajantha Teacher)	1pm-4pm
Vocal	10am-2pm
Keyboard	10am-2pm
Violin/ Veena	10am-2pm
Miruthangam	1pm-4pm
Tamil	10am-12noon

மற்றுமொரு மைல் கல்

கேம்ப்ரிட்ஜ் பரீட்சையின் உயர்தரப் பிரிவில், எமது தமிழ்ப் பாடசாலையிலிருந்து, தமிழ்ப்பாடப் பரீட்சைக்குத் தோற்றிய மூன்று மாணவர்களுமே A* பெறுபேறுகளைப் பெற்று, எல்லோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள்.

இந்தப் பெருமையைத் தேடித் தந்த செல்வன் மாதவ் கேதீஸ்வரராஜா, செல்வன் விசாகன் விஜயரட்ணம், செல்வி நந்திதா சந்திரமோகன் ஆகியோருக்குக் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் தனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.



கோலாகலமாக நடைபெற்ற தமிழ்ப் பாடசாலைக் கட்டடத் திறப்பு விழா

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்ப் பாடசாலைக் கட்டடத் திறப்பு விழா 08/01/2022 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கொவன்றி மாநகர பிதா பெருமதிப்புக்குரிய திரு ஜோன் மக்நிக்கலஸ் அவர்கள் கலந்து கொண்டு, பிரித்தானியத் தமிழ்ப் பரீட்சைச் சபை மற்றும் OFAAL பரீட்சைகளில் வெற்றியீட்டிய எமது மாணவர்களுக்குச் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார்.





அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தைப்பொங்கல் விழா 15/01/2022 அன்று வாண வேடிக்கைகளோடு, மிகவும் சிறப்பாக நடைபெற்றது. காலை 9 மணிக்கு ஆரம்பமான நிகழ்வில், கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டதால், பொங்கலோடு அங்கே மகிழ்ச்சியும் பொங்கியது. சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.



அறுவடை நாள்!

உழுது விதைத்த விதைகள் எல்லாம்
பழுதின்றி முளைத்துப் பயிராகி,
பெரும் பொழுதில் நெற்கதிராகித்
தலை முழுதும்
நெல்மணிகளைச் சுமந்து,

தையிலே தன் மெய் சிவந்து
கையிலே அரிவாளுடன் வரும்
காவலன் உழவனுக்காய்க் காத்திருந்து
பையிலே நிறையும் நாள்
அறுவடை நாள்!

நெல்மணிகளைச் சோறாக்க உழவனுக்கும்,
நெற்கதிர்களை வைக்கோலாய்க்
காளைகளுக்கும்,
நல்மனதோடு உவந்து அளிக்கும்
நன்னாளே இந்நாள்!

நெற்கதிர்கள் தம்மை அழித்து
எம்மை வாழ வைக்கும்
புனித நாள்
அறுவடை நாள்!

எத்தனை காத்திருப்பு!
எத்தனையிடமிருந்து காக்க வைப்பு.....

வெள்ளம் வந்தால் விவசாயி
உள்ளம் பதைபதைக்கும்!
மழை இல்லாவிட்டாலும் அவன்
மனம் கலங்கும்!

வெட்டுக்கிளி முதல்
தட்டுத்தடுமாறி வரும் யானை வரை
விடிய விடியக் காக்கவேண்டும் காவல்!

இரவு பகல் பாராது,
உணவு உறக்கம் பாராது,
வெயில் மழை பாராது,
வேர்வை சிந்தி
உழைத்த உழைப்புக்கெல்லாம்
விருது கிடைக்கும் நாள்!

முற்றிய கதிரை அறுத்துப் புதிராக்கி,
சுற்றியிருப்பவர் எல்லாம் கூடி,
பற்றியிருந்த பகைமை மறந்து,
உற்றார் உறவினராய்,
உண்டு மகிழும்
உன்னதமான நாள்!

புலம்பெயர் தேசத்தில் வாழும் நாம்,
இந்நாளை மனதில் நிறுத்தி,
புதிரின் சுவையை அடி
நாக்கில் நிறுத்தி,
பொதியில் வரும் அரிசியைப்
பொங்கும் நிலை!
பொங்கலோ பொங்கல்!
(இதழாசிரியர்)

'இங்கிலாந்தில் ஒரு யாழ்ப்பாணம்' பெயர்ப்பலகை திறப்பு

ஈழத்தமிழர்களின் கலாச்சார நகரான யாழ்ப்பாணம், பிரித்தானியாவின் இலண்டன் பெருநகர பிராந்தியத்தில் ஒன்றான கிங்ஸ்ரன் (Kingston Upon Themes) நகரத்துடன் இணைக்கப்பட்டதை வெளிப்படுத்தும் அறிவிப்புப்பலகை உத்தியோகப்பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.



அதனைத் தொடர்ந்து, அங்கிருந்து தமிழரின் வீர முரசான **பறை** இசை முழங்க, தமிழர் பாரம்பரிய கலைகளான **குதிரையாட்டம், கோலாட்டம், மயிலாட்டம், கும்மி, காவடி, கரகம், சிலம்பம்** என்பவற்றின் வண்ண அணிவகுப்புடன் பொங்கல் நடைபெற்ற சதுக்கம் நோக்கி கலாச்சார பேரணி மிகச்சிறப்பாகப் பிரதான வீதி வழியாக நகர்ந்து சென்றது.

அங்கு பொங்கல் விழாவும் தமிழர் கலை கலாச்சார நிகழ்வுகளும் நடாத்திக் காண்பிக்கப்பட்டன. குறிப்பாக, அருகிவரும் தமிழர் வீரக்கலைகளான **கம்பு, சிலம்பாட்டம், களரி, அடிமுறை** உட்பட்ட மிக அரிய தமிழர் வீரக்கலைகள் செய்து காண்பிக்கப்பட்டன. பனை உற்பத்திப் பொருட்கள் மற்றும் தமிழர் பாரம்பரிய வரலாற்று நூல்களும் காட்சிக்கு வைக்கப்பட்டன.

நன்றி!!! (இணையத்திலிருந்து)